**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 105/ந/2025
நாள். 27.06.2025

திரு.S.அன்பழகன்,
துறையூர். திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவரின் 15.03.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2025 அன்று பெறப்பட்டு 105/ந/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் அஞ்சல் & வட்டம், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.அன்பழகன் என்பவர் தனது 15.03.2025 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் உழவர் சந்தை எதிரில் திருமண மண்டபங்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்று அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் ஒன்றை கூட கடைப்பிடிக்காமல் விதி மீறி ஆர்த்தி திருமண மஹால் செயல்படுவதை பார்த்து எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் ஏற்பட்டது. ஏனென்றால் பிரதான சாலையில் பார்க்கிங்கென்று 1 அங்குலம் இடம் விடாமல் ஆர்த்தி திருமண மஹால் மெயின் ரோட்டில் கட்டி உள்ளதால் திருமண மண்டபத்திற்கு வரும் வாகனம் அனைத்தும் பிரதான சாலையில் நிறுத்தி விடுவதால், பொதுமக்கள் நடப்பதற்கு இடமின்றி தார் சாலையில் நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் திருமண மண்டபங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி திருமண மண்டபத்தின் மெயின் வாசல் 6 மீட்டர் இருக்க வேண்டும் என்றும், அது போக முகப்பு

வாசல் 1, சைடு வாசல் 2 என்று மொத்தம் 3 வாசல் கட்டாயம் இருக்க வேண்டும் என்றும், திருமண மண்டபத்தை சுற்றி 6 மீட்டர் அகலத்திற்கு காலி இடம் விட்டிருக்க வேண்டும் என்றும், திருமண மண்டபத்தின் முன்புறம் குறைந்த பட்சம் 700 சதுர அடி பார்க்கிங் வசதி செய்து இருக்க வேண்டும் என்றும், திருமண மண்டபத்தின் இரண்டு பக்கத்திலும் எதிர்பாராமல் ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால் அதை அணைக்கும் பொருட்டு திருமண மண்டபத்தின் இரண்டு பக்கத்திலும் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட தண்ணீர் தொட்டி கட்டி இருக்க வேண்டும் என்றும் அந்த தொட்டியில் எந்த நேரமும் தண்ணீர் இருக்க வேண்டும் என்றும் அரசு வகுத்துள்ள விதிமுறைகளில் ஒன்றை கூட கடைப்பிடிக்காமல் சட்ட விரோதமாக செயல்படும் ஆர்த்தி திருமண மஹால் மண்டபத்தை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலை பின்பற்றி இடித்து அகற்றுமாறு பொது நலன் சார்ந்து துறையூர் நகராட்சி ஆணையருக்கு 09.01.2025–ல் புகார் அனுப்பி அதனை அவர் 10.01.2025–ல் பெற்றுக்கொண்டு ஒப்புதல் சான்று வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், மண்டல இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பி அனைவரிடம் இருந்தும் ஒப்புகை சான்று வந்துள்ளது.

நான் 09.01.2025–ல் ஆணையருக்கு அனுப்பிய புகாரிலேயே விதிமுறைகளை மீறி செயல்படும் கட்டிடங்களை இடிப்பது தான் சட்டம் என்றும் விதி மீறிய கட்டிடங்களை இடிப்பது அதிகாரிகளின் கடமை என்றும் விதிமீறிய கட்டிடங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் மாண்புமிகு உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தெளிவாக உத்தரவு பிறப்பித்துள்ளதை சுட்டி காட்டியதோடு விதிமீறிய கட்டிடங்கள் மீது நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளதை நினைவூட்டியிருந்தேன்.

மேலும் ஆர்த்தி திருமண மஹால் போன்று விதிமீறி செயல்பட்ட திருமண மண்டபத்தால்தான் 2004–ல் திருச்சி ஸ்ரீரங்கம் திருமண மண்டபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 64 பேர் மரணமடைந்த சூழ்நிலையை கருத்தில் கொள்ளுமாறு நான் 09.01.2025–ல் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் நான் 09.01.2025–ல் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார் மனு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து தலைமை செயலாளர் கூறியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி என் புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தேன்.

எனவே நான் தகுந்த ஆதாரங்களோடு புகார் கொடுத்தும், உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை பின்பற்றுமாறு கேட்டும், தலைமை செயலாளர் கூறிய அறிவுறுத்தலை பின்பற்றுமாறு கேட்டும் இதுவரை துறையூர் நகராட்சி ஆணையர் என் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே சத்தியத்தையும், தர்மத்தையும் கடைபிடித்த காரணத்தால் உயர்ந்த பதவியில் இருக்கும் மரியாதைக்குரிய தாங்கள் தவறு செய்த நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுத்து, விதிமீறி செயல்படும் ஆர்த்தி திருமண மஹால் மண்டபத்தை இடித்து அகற்றுமாறு பொதுநலன் கருதி பணிவோடு, தாழ்மையோடு, கீழ்படிந்து கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் துறையூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.3683/2024/எப்1, நாள்.14.05.2025ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

" நகரமைப்பு ஆய்வாளரால் இடம் நேராய்வு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில், மேற்படி, திருமண மண்டபம் துறையூர் நகராட்சி எல்லைக்குள் அமையவில்லை என்றும் மதுராபுரி கிராம பஞ்சாயத்துக்கு கட்டுப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனு, துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள, துறையூர் நகராட்சி திருச்சி சாலையில் இயங்கி வரும் ஆர்த்தி திருமண மண்டபம், துறையூர் நகராட்சி எல்லைக்குள் அமையவில்லை என்றும் மதுராபுரி கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது என்ற துறையூர் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், 2014, பிரிவு 2 (7)ன் கீழ் மேற்படி கிராமப்பஞ்சாயத்து " உள்ளாட்சி அமைப்புகள்" என்ற வரையறைக்குள் வரவில்லை என அறியப்படுகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம்,
பிரிவு 2 (7)ல் "உள்ளாட்சி அமைப்பு" என்பது; -

i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், திண்டுக்கல் மாநகராட்சி அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அமைத்துருவாக்கப்படலாகும் பிற மாநகராட்சி; அல்லது

ii) 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது

iii) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு மாவட்ட ஊராட்சி; என்று பொருள்படும்.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014, பிரிவு 2(7)ன் கீழ், மேற்படி ஆர்த்தி திருமண மஹால் அமைந்துள்ள இடம் "உள்ளாட்சி அமைப்புகள்" என்ற வரையறைக்குள் இடம் பெறவில்லை என்பதால், மனுதாரரது புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜுன் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.அன்பழகன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின் ரோடு,
துறையூர் அஞ்சல் & வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்
துறையூர் நகராட்சி, துறையூர்.
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர்/இணை இயக்குநர்
Nodal Officer,
நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்